பழமையைக் கெடுக்கின்ற வகையில் அமைக்கப்பட்டிருக்கின்ற தூண்கள் பொது மக்களுக்கு இடையூறாக இருக்கின்ற காரணத்திற்காகவும் அந்த மேம்பாலத்தின் கட்டுமானப் பணி தற்போது நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. கட்டுமானப் பணியைக் காரணம் காட்டி கடந்த ஆட்சியிலே, கூவக்கரையோரம் இருந்த பொது மக்களை அப்புறப்படுத்தியிருக்கின்றார்கள். அவர்களை அப்புறப்படுத்தியதற்கான நியாயமான காரணம், அதுவல்ல. எனவே, மீண்டும் கட்டுமானப் பணியைத் தொடங்குவதற்கு அரசு முன்வருமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம், சென்னை துறைமுகம் முதல் மதுரவாயல் வரை உயர் மட்ட சாலையினை கூவம் ஆற்றின் கரையோரமாக அமைப்பதற்கு அரசு ஆணை (நிலை) எண் 199, பொதுப் பணித் துறை, நாள் 26-2-2007-ல் கொள்கையளவிலே ஒப்புதல் தந்துள்ளது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியுள்ள அந்தப் பாலம் தொடர்பான வழக்கு, தற்போது உயர் நீதிமன்றத்திலே இருக்கின்ற காரணத்தாலே, இங்கே விவாதிப்பது சரியில்லையென்று கருதுகின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுதொடர்பான கேள்வியைத் தவிர்க்க வேண்டுமாய் தங்கள்வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 301, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

301—

கால்வாய்த் திட்டம்

***24598—திரு. ப. டில்லி பாபு:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் வட்டம், மதிகெட்டான் கால்வாய்த் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2013 ஏப்ரல் 23]

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரூர் வட்டம், மாம்பட்டி, மத்தியம்பட்டி, கீழ்மொரப்பூர், பே.வேட்ரபட்டி மற்றும் கொங்குவேம்பு ஊராட்சிகளில் மதிகெட்டான் கால்வாய்த் திட்டத்தினை நிறைவேற்ற அரசு முன்வருமா என்று மாண்புமிகு உறுப்பினர் கேள்வி எழுப்பியிருக்கிறார். அரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட குலகம்பட்டி, மாருதிப்பட்டி உள்ளிட்ட எட்டு ஊராட்சிகளில் இருக்கின்ற நிலங்கள் பாசனம் பெறும்பொருட்டு, தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், தொட்டாம்பட்டி கிராமம் அருகே பெண்ணையாற்றின் குறுக்கே அணை அமைத்து ஷெனாய்கல் மதிகெட்டான் கால்வாய்மூலம் அருகிலுள்ள ஏரிகளுக்குத் தண்ணீர் வழங்க 1991-1992 ஆம் ஆண்டில், ரூ.475 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. இதன் பயன் செலவு விகிதம் மிகவும் குறைவாக இருக்கின்ற காரணத்தாலே, இந்தத் திட்டத்தைச் செயலாக்குவதன் மூலம் 132 ஏக்கர் நன்செய் நிலங்களுக்கு இடைவெளி நிரப்புவதோடு, 468 ஏக்கர் புன்செய் நிலங்கள் பாசன வசதி பெறும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தைச் செயலாக்குவதற்கு 18.36 ஏக்கர் பட்டா நிலங்களும், 46.89 ஏக்கர் பாதுகாக்கப்பட்ட வன நிலங்களும் கையகப்படுத்தப்பட வேண்டும். இத்திட்டத்தின் பயன் செலவு விகிதம் மிகவும் குறைவாக இருக்கின்ற காரணத்தாலும், பாதுகாக்கப்பட்ட வன நிலங்களைக் கையகப்படுத்துவது கடினம் என்ற காரணத்தினாலும் இத்திட்டம் கைவிடப்பட்டது. மேலும், இத்திட்டத்திற்கு மாற்றுத் திட்டமாக, இதனைப் பொருளாதார ரீதியாக சாத்தியமான திட்டமாக மாற்றியமைக்க கள ஆய்வு மேற்கொண்டபொழுது, அதற்கான சாத்தியக்கூறுகள் இல்லையென கண்டறியப்பட்டுள்ளது. சென்ற கூட்டத் தொடரிலேயே இந்தக் கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியுள்ளார்கள். இந்தக் கால்வாயின் பெயரே மதிகெட்டான் கால்வாய். எனவே, இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு சாத்தியம் இல்லை. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேறு கேள்வியைக் கேட்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி, கிருஷ்ணகிரி ஆகிய இரண்டு மாவட்டங்கள் பயன்பெற கொட்டாரப்பட்டி பகுதியிலே, பிரிட்டிஷ்காரர் காலத்தில் வெட்டப்பட்ட கால்வாய், மதிகெட்டான் கால்வாய். ஷெனாய்கல் கால்வாய் என்று பெயர் மாற்றம் செய்யலாம் என்றுகூட பேசப்பட்டது. வெளாம்பள்ளி, மருதிப்பட்டி, கீழ்மொரப்பூர், வேட்டப்பட்டி, வடுகப்பட்டி, கொங்குவேம்பு, தீர்த்தமலை ஆகிய ஏழு பஞ்சாயத்திற்குட்பட்ட 30 ஏரிகள், 1,500 கிணறுகளின் நீர்மட்டம் உயர்கின்ற அளவிற்கு, விவசாயம் செய்வதற்கு ஏதுவாக இந்தக் கால்வாய்த் திட்டம் அமையும். ஏற்கெனவே, இதற்கான மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, மொரப்பூரை அடுத்த RS தொட்டம்பட்டியில் இரயில் நிலையம் அமைக்கும்பட்சத்தில், அதற்குக் கீழாக இந்தக் கால்வாயை வெட்டுவதற்கான சாத்தியக்கூறு இல்லையென்று அப்பொழுதே கிடப்பில் போடப்பட்டது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பயன்பாடு குறைவாக இருப்பதாகச் சுட்டிக்காட்டினார். ஆனால், இத்திட்டத்தினால் சுமார் 10,000 ஏக்கர் விவசாய நிலம் பாசன வசதி பெறும். அரசு பல்வேறுபட்ட திட்டங்களைச் செயல்படுத்தும்போது, இலாப நோக்கத்தோடு செயல்படுத்துவதில்லை. இந்தியாவிலே, குறிப்பாக பூனாவிலே . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ப. டில்லி பாபு, கேள்வியைக் கேளுங்கள்.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூனாவிலே நடைபெற்ற ஓர் ஆய்வில் தமிழகத்திலே மிகவும் வறட்சியான பகுதி மொரப்பூர் பகுதி, கருப்புப் பகுதி என்றெல்லாம் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட மொரப்பூர் பகுதியிலே மதிகெட்டான் கால்வாய், ஷெனாய்கல் கால்வாய்த் திட்டத்தை நிறைவேற்றினால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியிலுள்ள 10,000-க்கும் மேற்பட்ட விவசாய மக்களைப் பாதுகாக்க முடியும். ஆகவே, இதுகுறித்து அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்வார்களா? இல்லாவிடில், வேறு சிறப்பான திட்டம் கொண்டுவருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே கருத்துரு உள்ளதா என்று கேட்டு அமர்கிறேன்.

2013 ஏப்ரல் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-10

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, வல்லரசே போற்றுகின்ற நல்லஅரசு. (மேசையைத் தட்டும் ஒலி) முதலிலே, மதிகெட்டான் கால்வாய் என்ற பெயரை மாற்றி, இந்தத் திட்டம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிகெட்டான் கால்வாய் என்ற பெயரை மாற்றி, ஷெனாய்கல் கால்வாய்த் திட்டத்தைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வதாக அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. அதேபோல், ஏற்கெனவே எனது தொகுதியிலுள்ள கே.ஆர்.பி. அணையிலிருந்து வலதுபுறக் கால்வாய்த் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய மாண்புமிகு முதலமைச்சரிடத்திலேகூட நான் முதல்முறையாகக் கேட்டிருந்தேன். அந்தத் திட்டம், 27 கிராமங்களில் உள்ள பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் பயன்பெறக்கூடிய திட்டம். ஏற்கெனவே கே.ஆர்.பி. அணையிலிருந்து கம்பைநல்லூர், போலயம்பள்ளி, தாசிரள்ளி, மொரப்பூர், ஈச்சம்பாடி வழியாக நீட்டிக்கப்படுகின்ற அந்தத் திட்டத்தை, இந்த ஆண்டாவது தொடங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.